# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2053/20 - 2018 ජනවාරි මස 10 වැනි බදාදා - 2018.01.10

*2053/20 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 10 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) – பொது

### அரசாங்க அறிவித்தல்கள்

**ச.வ.பி 3/2006**

**2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டம்.**

2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல் வாங்கல்கள் அறிக்கையிடல் சட்டத்தின் 2 ஆம் பிரிவின்கீழ் நிதிசார் உளவறிதற் கூறினால் ஆக்கப்பட்ட விதிகள்.

நிதிசார் உளவறிதற் கூறு

கொழும்பு

2018, சனவரி 10.

**விதிகள்**

1. இவ்விதிகள் 2018 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க, பெயர்குறிக்கப்பட்ட நிதிசாரா தொழில் (வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன) விதிகள் என எடுத்துக்காட்டப்படலாம்.

2. இவ்விதிகள் (இதனகத்துப்பின்னர் "நிதிசாராத் தொழில்" என குறிப்பீடு செய்யப்படும்) பின்வரும் பெயர்குறிக்கப்பட்ட நிதிசாராத தொழிலுக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்:-

(அ) ஒன்பதாம் விதியின் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட நிதிசார் கொடுக்கல் வாங்கல்களில் தமது வாடிக்கையாளர்கள்ஈடுபடும் போது இணையம் ஊடாக அத்தகைய ஒரு தொழிலைக் கொண்டு நடாத்துகின்ற ஆளொருவர் உட்பட கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தர் ஒன்றை நடாத்துதல் ;

(ஆ) நிலையான ஆதன முகவர்கள், அவர்கள் ஆதனங்களின் கொள்வனவு மற்றும் விற்பனை தொடர்பில் தங்கள் வாடிக்கையாளர்களுக்காக கொடுக்கல் வாங்கல்களில் ஈடுபடும் போது ;


1A - G26926 - 12 (2017/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk.எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(இ) விலையுயர்ந்த உலோகங்களின் வியாபாரிகளும் மற்றும் விலையுயர்ந்த அத்துடன் அரைவாசி விலையுயர்ந்த கற்களை வியாபாரஞ் செய்பவர்கள், அவர்கள் 9 ஆம் விதியின் (2) ஆம் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட தொடக்க நிலைக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட காசுக் கொடுக்கல் வாங்கல்களில் வாடிக்கையாளருடன் ஈடுபடும்போது 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க, தேசிய இரத்தினக்கற்கள் ஆபரணங்கள் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்பட ஆனால் அவற்றுக்கும் மட்டுப்படுத்தப்படாத விலையுயர்ந்த உலோகங்களின் வியாபாரிகள் மற்றும் விலையுயர்ந்த மற்றும் அரைவாசி விலையுயர்ந்த கற்களின் வியாபாரிகள் ;

(ஈ) சட்டவறிஞர்கள், நொத்தாரிசுகள், வேறு சுயாதீன சட்ட உயர்தொழிலர்கள் மற்றும் கணக்காளர்கள், அவர்கள் பின்வரும் எவையேனும் செயற்பாடுகள் தொடர்பில் தங்கள் கட்சிக்காரர்களுக்காக கொடுக்கல்வாங்கலை ஆயத்தம் செய்யும்போது அல்லது கொண்டு நடாத்தும்போது :-

(i) நிலையான ஆதனக் கொள்வனவு மற்றும் விற்பனை ;

(ii) கட்சிக்காரரின் பணத்தை, பிணையங்களை அல்லது வேறு சொத்துக்களை முகாமைசெய்தல் ;

(iii) வங்கி சேமிப்புக்கள், அல்லது பிணையங்களின் கணக்குகளை முகாமைசெய்தல் ;

(iv) கம்பெனிகளின் உருவாக்கத்திற்கு, தொழிற்பாட்டிற்கு அல்லது முகாமைத்துவத்திற்கு உதவு தொகைகளை ஒழுங்குசெய்தல் ; அத்துடன்

(v) சட்ட ஆட்களின் அல்லது ஒழுங்கேற்பாடுகளின் உருவாக்கம், தொழிற்பாடு, அல்லது முகாமைத்துவம் அல்லது ஒழுங்கேற்பாடுகள் அத்துடன் தொழில் உருவகங்களின் கொள்வனவும் விற்பனையும் ;

(உ) தொழில் என்ற வகையில் மூன்றாம் திறத்தவர்களுக்கு ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பின்வரும் சேவைகளில் எதனையும் அல்லது எவற்றையும் வழங்குகின்றதான (அ) தொடக்கம் (ஈ) வரையான பந்திகளினால் வேறுவகையில்மேவப்படாத நம்பிக்கைப்பொறுப்பு அல்லது கம்பெனிச் சேவைவழங்குநர் :-

(i) சட்ட ஆட்களை உருவமைத்தல் அல்லது முகாமை செய்தல் ;

(ii) கம்பெனியொன்றின் பணிப்பாளர் அல்லது செயலாளர் ஒருவராக, பங்காண்மையொன்றின் பங்காளர் ஒருவராக அல்லது வேறுசட்ட ஆட்கள் தொடர்பாக அதனையொத்த பதவியொன்றில் செயலாற்றுதல் அல்லது செயலாற்றுமாறு வேறோர் ஆளை ஒழுங்குசெய்தல் ;

(iii) கம்பெனியொன்றுக்கு, பங்காண்மையொன்றுக்கு அல்லது வேறு எவரேனும் சட்டஆளுக்கு அல்லது ஒழுங்கேற்பாட்டிற்கு பதிவுசெய்யப்பட்ட அலுவலகமொன்றை, தொழில்முகவரி ஒன்றை, அல்லது இடவசதியை, கடிதத்தொடர்பை அல்லது நிருவாக முகவரியை ஏற்பாடு செய்தல் ;

(iv) வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பொன்றின் நம்பிக்கைப் பொறுப்பாளராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறொரு ஆளை ஒழுங்கேற்பாடு செய்தல் ;

(v) வேறோர் ஆளுக்கு நியமத்தர், பங்குதாரர் ஒருவராகச் செயலாற்றுதல் அல்லது அவ்வாறு செயலாற்றுவதற்கு வேறோர் ஆளை ஒழுங்கேற்பாடு செய்தல் ;

3. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும் அதன் வாடிக்கையாளரினால் வெளிப்படுத்தக்கூடிய பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்கண்டு, மதிப்பிட்டு மற்றும் முகாமை செய்யும் நோக்கத்திற்காக (இதனகத்துப்பின்னர் “வாஉவி” எனக் குறிப்பீடு செய்யப்படும். தொடர்ச்சியான வாடிக்கையாளர்விழிப்புக்கவனத்தை “இடர் அடிப்படையிலான அணுகுமுறையில்” அடிப்படையில் நடாத்துவதன்மூலம் இவ்விதிகளிற் குறித்துரைக்கப்பட்ட அத்தகைய வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

## பாகம் I

## பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்முகாமை

**பொதுவான இடர்முகாமை**

4. இடர்முகாமைப் பணிகளின் செறிவும் பரந்தளவும் “இடர் அடிப்படையிலான அணுகுமுறைக்கு” இணங்கியொழுகுவனவாகவிருத்தல் வேண்டுமென்பதுடன், நிதிசாராத் தொழிலின் செயற்பாடுகளின் தன்மை, அளவு, பிணைவுநிலை, பணம் தூய்தாக்கல் மட்டம் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்கள் என்பவற்றுக்கான விகிதாசாரப்படியாகவிருத்தல் வேண்டும்.

5. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும் அதன் வாடிக்கையாளர்கள், நாடுகள் அல்லது புவியியற்சார் இடப்பரப்புக்கள் மற்றும் அளிபொருட்கள் சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது சேர்ப்பிப்பு வழிகள் தொடர்பாக அதன் பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்காண்பதற்கும், மதிப்பிடுவதற்கும், முகாமை செய்வதற்கும் 6 ஆம் மற்றும் 7 ஆம் விதிகளின் நியதிகளின்படி தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

6. ஏழாம் விதியின் ஏற்பாடுகளுக்கு அமைய, தொடர்ச்சியான தொழில் தொடர்புகளை செய்துகொள்கின்ற அல்லது ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நடாத்துகின்ற நிதிசாரா தொழில் ஒவ்வொன்றும்-

(அ) பின்வருவன உட்பட தோதான இடர் மதிப்பீட்டை நடாத்துதல் வேண்டும் :-

(i) ஒட்டுமொத்த இடர் மட்டம், மற்றும் தோதான மட்டம் மற்றும் பயன்படுத்தப்படவேண்டிய தணிப்புவகை என்பவற்றை தீர்மானிக்கமுன்னர் இயைபான எல்லா இடர்காரணிகளையும் கவனத்திற்கொள்ளல் ;

(ii) இடர்மதிப்பீடுகளையும் கண்டுபிடிப்புகளையும் ஆவணப்படுத்துதல் ;

(iii) காலாகாலப் பரிசீலனையினூடாக மதிப்பீட்டை நாளது வரையாக வைத்திருத்தல் ;

(iv) தோதான பொறிமுறைகள் ஊடாக மேற்பார்வை அதிகாரிக்கு இடர் மதிப்பீட்டுத் தகவலை வழங்குதல் ;

(ஆ) பின்வருவன உட்பட முறையான இடர்க்கட்டுப்பாடு மற்றும் தணிப்பு முறைகளைக் கொண்டிருத்தல்.

(i) அடையாளங் காணப்பட்டுள்ள பணம் தூய்தாக்கல், மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் கொள்கைகளையும், கட்டுப்பாடுகளையும் நடவடிக்கை முறைகளையும் கொண்டிருத்தல்;

(ii) அக்கொள்கைகள், கட்டுப்பாடுகள் மற்றும் நடவடிக்கை முறைகள் என்பனவற்றை நடைமுறைப்படுத்துவதனைக் கண்காணித்தலும் அவசியமாயின் அவற்றை மேம்படுத்துதலும்;

(iii) உயர்ந்த இடர்கள் அடையாளம் காணப்படுகின்றவிடத்து இடர்களை முகாமைசெய்து தணிப்பதற்கான மேம்படுத்தப்பட்ட வழிமுறைகளை எடுத்தல்; அத்துடன்

(iv) குறைந்த இடர்கள் அடையாளங் காணப்படுகின்றவிடத்து சாதாரண வழிமுறைகளை எடுத்தல்.

(இ) பின்வருவனவற்றைக் கவனத்திற்கொண்டு அதன் வாடிக்கையாளர் மீதான இடர்வெளிப்பாடுகளைச் நடாத்துதல்.

(i) வாடிக்கையாளர் வகுதிக்கிணங்க இடர்மட்டம் (உதாரணம்:- வதிவுள்ள அல்லது வதிவற்ற, இடைக்கிடை அல்லது இருந்திட்டொன்றான, சட்ட ஆட்கள், அரசியல் ரீதியில் முகங்கொடுக்க வேண்டிய ஆட்கள் மற்றும் வெவ்வேறு வகையினவான தான்புரி தொழிலில்ஈடுபட்டுள்ள வாடிக்கையாளர்கள் போன்ற வாடிக்கையாளர்களின் வெவ்வேறு வகைகள்.

(ii) தொழிலின் புவியியற்சார் அமைவிடம் அல்லது வாடிக்கையாளரின் மூலநாடு அல்லது வதிவிட நாடு அல்லது இரண்டும் ;

(iii) வாடிக்கையாளரின் அளிபொருட்கள், சேவைகள், கொடுக்கல்வாங்கல்கள் அல்லது சேர்ப்பிப்பு வழிகள் (உதாரணம் பண அடிப்படையிலான, நேருக்கு நேரான அல்லது நேருக்கு நேரல்லாத, எல்லை கடந்த; அத்துடன்

(iv) வாடிக்கையாளர் தொடர்பான வேறு ஏதேனும் தகவல்கள் ;

(ஈ) வாடிக்கையாளரின் தொடக்க நிலை ஏற்பின்மீது பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்மட்டத்தினை அடிப்படையாகக் கொண்டு வாடிக்கையாளரின் இடர்வெளிப்பாட்டை கிரமமாக மீள்பரிசீலனை செய்தலும் நாளதுவரையாக்குதலும்.

(உ) வாடிக்கையாளர் ஒவ்வொருவருக்கு அல்லது வாடிக்கையாளர் வகுதிக்கு ஏற்புடையதாக்கப்படும் இடர் கட்டுப்பாடு மற்றும் தணிப்பு வழிமுறைகள் என்பன வாடிக்கையாளரின் அல்லது வாடிக்கையாளர் வகுதியின் மதிப்பிடப்பட்ட இடர்மட்டத்துடன் ஒத்ததாகவிருத்தலும்,

(ஊ) பணத்தூய்தாக்கலுக்கு எதிரானதும் பயங்கரவாதி நிதியளிப்புக்கு எதிராகவும் அப்போதைக்கு வலுவிலுள்ள ஏதேனும் எழுத்திலான சட்டத்திற்கு அமைய சிரேஷ்ட முகாமையினால் அல்லது பணிப்பாளர்கள் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட உள்ளக கொள்கைகளை வகுத்தமைத்தலும்

(எ) பின்வருவன உட்பட (ஊ) என்னும் பந்தியின்கீழ் வகுத்தமைக்கப்பட்ட கொள்கையுடன் இணங்கியொழுகுவதில் விபரமான நடவடிக்கைமுறைகளையும் கட்டுப்பாடுகளையும் விருத்தி செய்தலும்.

(i) வா.உ.வி வழிமுறைகளை மேற்கொள்ளுதலும் பதிவை வைத்திருத்தலும் பொறிமுறையை பேணுதலும்.

(ii) வழமைக்கு மாறான அல்லது சந்தேகத்திற்கு இடமான கொடுக்கல்வாங்கல்களைத் தடுத்தலும் உள்ளக அறிக்கையிடும் நடவடிக்கைமுறையும்;

(iii) நிதிசார் உளவறிதல் அலகிற்கு சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடுதல்.

(iv) நிரந்தர அடிப்படையில் அல்லது வேறு ஏதேனும் அடிப்படையில் ஊழியர்களை நியமிக்கின்ற அல்லது வேலைக்கமர்த்துகின்ற காலத்தில் அனைத்துமடங்கிய ஊழியர் பற்றிய உரிய விழிப்புக்கவனத்தையும் முன்னாய்வு நடவடிக்கை முறைகளையும் விருத்தி செய்தலும் அமுல்படுத்தலும்;

(v) இயைபான எழுத்திலான சட்டத்திற்கு அமைய சுயேட்சையான கணக்காய்வுப் பணியை பராமரித்தல்;

(vi) பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடரை பயனுறுதியானமுறையில் முகாமை செய்கின்ற சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல்களை அடையாளங்காணுதல் பற்றி இயைபான ஊழியர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஏற்பாடு செய்தல்

வேண்டும்.

**ஏகபோக தொழிலர்கள் மற்றும் உரிமையாளர்கள்**

7. ஆறாம் விதியின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும் (இதனகத்தப்பின்னர் "சட்டம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் கருத்தெல்லையினுள் தமது கட்சிக்காரருக்காக ஏதேனும் கொடுக்கல்வாங்கலை நிறைவேற்றும் ஏகபோக தொழிலர்களாக அல்லது ஏகபோக உரிமையாளரான வரவுகளை சட்டவறிஞர்கள், நொத்தாரிசுகள், வேறு சுயாதீன சட்ட உயர் தொழிலர்கள் மற்றும் கணக்காளர்கள் இயைபான துறையினால் வெளிப்படுத்தப்பட்ட இடர்மட்டத்தைக் கவனத்திற்கொண்டு இச்சட்டத்திற்கும் ஏதேனும் ஒழுங்குவிதிக்கும் அல்லது அதன்கீழ் வழங்கப்பட்ட விதிக்கும் அமைய நிதிசார் உளவறிதல் கூறினால் காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட வழிகாட்டுநெறிகளை பின்பற்றுதல் வேண்டும்.

**கம்பெனிகளின் தொகுதி**

8. (1) நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் இலங்கையைவிட பணம் தூய்தாக்கலை முறியடிப்பதற்காகவும் பயங்கரவாதி நிதியளிப்புக்கு எதிராகவும் குறைந்த கண்டிப்பான சட்ட ஏற்பாடுகளை வழங்குகின்றதான ஏதேனும் நாட்டில் தொழிற்படுகின்ற தமது வெளிநாட்டுக்கிளைகளை அல்லது பெரும்பான்மையை சொந்தமாக்கிய துணை நிலைக் கம்பெனிகள் இவ்விதிகளுடன் இணங்கியொழுகுகின்றனவென உறுதிப்படுத்துதல் வேண்டும்.

(2) (1)ஆம் பந்தியில் ஏற்பாடுசெய்யப்பட்டவாறு செயலாற்றுவதற்கு இயைபான வெளிநாட்டுச் சட்டத்தினால் அனுமதிக்கப்படாதிருக்குமிடத்து, அத்தகைய நிதிசாரா தொழில் ஒவ்வொன்றும் இயைபான வெளிநாட்டுச் சட்டங்களிற்கு முரணாக இராத தோதான வழிமுறைகளை அமுல்படுத்துதல் வேண்டும் என்பதுடன் நிதிசார் உளவறிதல் அலகிற்கும் இயைபான மேற்பார்வை அதிகாரிக்கும் அறிவித்தலும் வேண்டும்.

## பாகம் II

## வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனம் (வாஉவி)

### பொதுவான வா.உ.வி

9. (1) ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும் சட்டத்தின் 2ஆம் பிரிவின் நோக்கங்களுக்காக இப்பாகத்தின் ஏற்பாடுகளுக்கமைய இவ்விதிகளில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளைச் செய்தல் வேண்டும்.

(2) ஓராம் பந்தியின் ஏற்பாடுகள் எதுஎவ்வாறிருப்பினும், பின்வரும் உபபந்திகளில் குறித்துரைக்கப்பட்ட ஏதேனும் நிதிசாரா தொழில், அத்தகைய ஒவ்வொரு உபபந்தியிலும் குறித்துரைக்கப்பட்ட நிலமைகளுக்காக, இப்பாகத்தில் குறித்துரைக்கப்பட்ட வாடிக்கையாளர்கள் பற்றிய உரிய விழிப்புக்கவன (வா.உ.வி) வழிமுறைகளைச் செய்தல் வேண்டும்.

(அ) வாடிக்கையாளர் ஒருவர் இலங்கை ரூபாக்களில் அல்லது மூவாயிரம் (3000) ஐக்கிய அமெரிக்க டொலர்களுக்குச் சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் நிதிசார் கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடுகின்றபோது இணையத்தினூடாக அத்தகைய ஒரு தொழிலை கொண்டு நடாத்துகின்ற ஆளொருவர் உட்பட கசினோக்கள், சூதாட்ட இல்லங்கள் அல்லது லொத்தர் ஒன்றை நடாத்துதல் ;

(ஆ) உரிய வியாபாரி, இலங்கை ரூபாக்களில் அல்லது பதினைந்தாயிரம் ஐக்கிய அமெரிக்க டொலருக்கு சமமான அல்லது அதற்கு மேற்பட்ட ஏதேனும் வெளிநாட்டு நாணயத்தில் வாடிக்கையாளர் ஒருவருடனான ஏதேனும் காசுக் கொடுக்கல்வாங்கலில் ஈடுபடுகின்றவிடத்து, 1993 ஆம் ஆண்டின் 50 ஆம் இலக்க இரத்தினக்கற்கள், ஆபரணங்கள் சட்டத்தினால் மேவப்பட்ட உலோகங்களும் கற்களும் உட்படஆனால் அவற்றுக்கு மட்டுப்படுத்தப்படாத

10. இப்பாகத்தின் நோக்கத்திற்காக, நிதிசாராத தொழில் ஒவ்வொன்றும்-

(அ) வாடிக்கையாளரை அடையாளம் காணுதலும் அதனுடன் நம்பத்தகு சுசேட்சையான மூலஆவணங்கள் தரவு அல்லது தகவல் ஒன்றைப் பயன்படுத்தி வாடிக்கையாளரது அடையாளத்தை சரிபார்த்தலும்;

(ஆ) வாடிக்கையாளரின் சார்பில் செயலாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்ட எவரேனும் ஆள் அவ்வாறு அதிகாரமளிக்கப்பட்டிருக்கின்றாரா என சரிபார்த்தல் மற்றும் அத்தகைய ஆளின் அடையாளத்தை அடையாளங்காணுதலும் சரிபார்த்தலும்;

(இ) பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்காணுதல் மற்றும் நிதிசாராத தொழிலின் திருப்திக்கு நம்பத்தகு மூலம் ஒன்றிலிருந்து பெறப்பட்ட இயைபான தகவல் அல்லது தரவினைப் பயன்படுத்தி பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தல்;

(ஈ) தொழில் உறவின் நோக்கம் மற்றும் உட்கருதப்பட்ட தன்மை என்பனபற்றி புரிந்துகொள்ளுதலும் இயைபானவிடத்து தகவலைப் பெற்றுக்கொள்ளுதலும்

வேண்டும்.

11. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் வாடிக்கையாளர் ஒருவர்மீது மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் ஒருவர்மீது வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவனத்தை செய்யும் நோக்கத்திற்காக குறைந்தபட்சம் பின்வரும் தகவல்களைப்பெறுதல் வேண்டும்.

(அ) முழுப்பெயர் ;

(ஆ) நிரந்தர வதிவிட அல்லது அஞ்சல் முகவரி ;

(இ) தொழில் தொழில்தருநரின் பெயர் தான்புரிதொழில் அல்லது பிரதான செயற்பாடு

(ஈ) தேசிய அடையாள அட்டை, கடவுச்சீட்டு, சாரதி உரிமைப்பத்திரம் போன்ற வாடிக்கையாளரின் புகைப்படம் அல்லது பயன்பெறும் சொந்தக்காரரின் புகைப்படம் ஒன்றைக் கொண்டுள்ளதான அலுவலக தனிப்பட்ட அடையாள இலக்கம் அல்லது வேறு ஏதேனும் அடையாள ஆவணம்

(உ) பிறந்த திகதி ;

(ஊ) இனம் ;

(எ) நிதிமூலம் ;

(ஏ) கொடுக்கல்வாங்கலின் நோக்கம் ;

(ஐ) தொலைபேசி இலக்கம் (வதிவிட, அலுவலக அல்லது கையடக்க தொலைபேசி)

12. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றுடன் மூல ஆவணத்தைக் கொடுத்துதவுவதற்கும் சொல்லப்பட்ட ஆவணத்தின் பிரதியொன்றை ஆக்குவதற்கும் வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரரைத் தேவைப்படுத்துவதன்மூலம் 11 ஆம் பிரிவின் (ஈ) என்னும் பந்தியில் குறித்துரைக்கப்பட்ட ஆவணங்களைச் சரிபார்த்தல் வேண்டும்.

**சரிபார்த்தலின் நேரம்**

13. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் தொழில் தொடர்பினுள் பிரவேசிக்கும் முன்னர் அல்லது பிரவேசிக்கும் போது வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரரின் அடையாளத்தை சரிபார்த்தல் வேண்டும்.

14. நிதிசாராத் தொழில் ஒன்று பணம் தூய்தாக்கல் அல்லது பயங்கரவாதி நிதியளிப்பு சம்பந்தமான சந்தேகத்தை உருவாக்குமிடத்தும் அத்துடன் அது வடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக்கவன (வாஉவி) வழிமுறைகளை நடாத்துதல் வாடிக்கையாளருக்கு உதவிக்குறிப்பாக இருக்கும் என நியாயமான முறையில் நம்புகின்றவிடத்தும், அது வாடிக்கையாளர் பற்றிய உரிய விழிப்புக் கவன வழிமுறைகளை நடாத்தாமல் தொடரலாம். ஆனால் இச்சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கு இணங்க சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கை ஒன்றை உடனடியாக கோப்பிடுதல் வேண்டும்.

15. வாடிக்கையாளர் ஒருவர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் ஒருவர் குறைந்த இடர் ஒன்றாக மதிப்பிடுகின்றவிடத்து, 11 ஆம் பிரிவில் குறித்துரைக்கப்பட்ட ஆகக்குறைந்த தகவலை பெறுவதன்மூலம் வாஉவி வழிமுறைகளை ஏற்புடையதாக்குதல் நிதிசாராத் தொழிலுக்கு சட்டமுறையானதாதல் வேண்டும்.

**அதிகரித்த வாஉவி**

16. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் வாடிக்கையாளர் ஒருவருக்கு மதிப்பிடப்பட்ட பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர் ஆள் உயர் இடரொன்றாக மதிப்பிடப்பட்டுள்ளவிடத்து, 11 ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்ட வழிமுறைகளும் சேர்த்து பின்வரும் அதிகரித்த வாஉவி வழிமுறைகளை நடத்துதல் வேண்டும்.

(அ) வாடிக்கையாளர் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர் பற்றி மேலதிக தகவலைப் பெறல் (உதாரணம். பொதுவான தரவுத்தளத்திலிருந்து சொத்துக்கள், வேறு தகவலின் அளவு)

(ஆ) வாடிக்கையாளருடனான தொழில் தொடர்பை உருவாக்குமுன்னர் அல்லது உளதாம் வாடிக்கையாளரின் விடயத்தில் வாடிக்கையாளருடனான அத்தகைய தொழில் தொடர்பை தொடர்வதற்கு எவையேனும் இருப்பின் சிரேட்ட முகாமையிடமிருந்து அங்கீகாரம் பெறுதல்.

(இ) தொழில் தொடர்பின் உட்கருதப்பட்ட தன்மை பற்றி மேலதிக தகவலைப் பெற்றுக்கொள்ளுதல்.

(ஈ) வாடிக்கையாளரினதும் பயன்பெறும் சொந்தக்காரரினதும் அடையாளங்காணல் தரவை கிரமமான முறையில் நாளது வரையாக்குதல்; அத்துடன்

(உ) நடைபெறவுள்ள அல்லது புரியப்பட்ட கொடுக்கல்வாங்கல்களுக்கான காரணங்களை விசாரணை செய்தலும் பதிவு செய்தலும்.

**சட்ட ஆட்கள் மற்றும் சட்ட ஒழுங்கேற்பாடுகள்.**

17. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் ஒரு சட்ட ஆளாக அல்லது சட்ட ஒழுங்கேற்பாடாக இருக்கும் வாடிக்கையாளரொருவரின் விடயத்தில்:-

(அ) வாடிக்கையாளரின் தொழில், அதன் சொத்தாண்மை மற்றும் கட்டுப்பாட்டுக் கட்டமைப்பு என்பவற்றில் தன்மையைப் புரிந்துகொள்ளுதல்.

(ஆ) பின்வரும் தகவல் மூலம் வாடிக்கையாளரை அடையாளம் காணுதலும் அதனது அடையாளத்தை சரிபார்த்தலும் :-

(i) பெயர், சட்டஆளின் அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டின் வகை மற்றும் உளதாம் தன்மை பற்றிய எண்பிப்பு அமையும் புறவிதி, அமைப்பு, அகவிதி, கூட்டிணைப்புச்சான்றிதழ் அல்லது பதிவுச்சான்றிதழ் (சான்றுப்படுத்துப்பட்ட

உண்மைப் பிரதிகள் அல்லது நொத்தாரிசு முறையில் நிறைவேற்றப்பட்ட பிரதிகள் என்பன ஏற்றுக்கொள்ளப்படலாம்) அல்லது வாடிக்கையாளரின் ஆள் அடையாளத்தை சரிபார்ப்பதற்கான வேறு ஏதேனும் நம்பத்தகு குறிப்பீடுகள்.

(ii) பணிப்பாளரினது தீர்மானம் மற்றும் சிரேட்ட முகாமைத்துவ பதவிகளைக் கொண்டுள்ள இயைபான ஆட்களின் பெயர்கள் போன்ற வாடிக்கையாளரை ஒழுங்குபடுத்தும் அல்லது பணிக்கும் தத்துவங்கள்.

(iii) பதிவுசெய்யப்பட்ட அலுவலகத்தின் முகவரி மற்றும் வேறுபாடிருப்பின், பிரதான தொழிலிடம்.

18. சட்ட ஆளொருவரில் கட்டுப்படுத்துகின்ற சொத்தாண்மை அக்கறையை இறுதியாக கொண்டுள்ள இயற்கை ஆள் எவரேனுமிருப்பின் அவரை அடையாளங்காண்பதற்கென, நிதிசாராத் தொழில் ஒன்று குறைந்தபட்சம் பின்வருவனவாறான பெறுதலும் அவற்றைச் சரிபார்ப்பதற்கு நியாயமான வழிமுறைகளை எடுத்தலும் வேண்டும்.

(அ) எல்லாப் பணிப்பாளர்களிலும் பங்குதாரர்களிலுமான ஏதேனும் மாற்றத்தை அறிவிக்கும்படி சட்ட ஆளின்மீது விதிக்கப்பட்ட தேவைப்பாட்டுடன் பத்துசதவீதத்துக்கு மேற்பட்ட ஒப்புரவு அக்கறையுடனான அத்தகைய பணிப்பாளர்களையும் பங்குதாரர்களையும் அடையாளங்காணுதல்;

(ஆ) கட்டுப்படுத்துகின்ற சொத்தாண்மை அக்கறையுடனான ஆள் பயன்பெறும் சொந்தக்காரராவென்பது பற்றி ஐயமொன்றிருப்பின் அல்லது சொத்தாண்மை அக்கறைமூலம் இயற்கை ஆளெவரும் கட்டுப்பாட்டைச் செலுத்தாதவிடத்து, வேறு வழிவகைகளினூடாகச் சட்ட ஆளின்மீது அல்லது ஒழுங்கேற்பாட்டின்மீது கட்டுப்பாட்டைச் செலுத்துகின்ற இயற்கை ஆள் எவரேனுமிருப்பின் அவரின் ஆளடையாளம்;

(இ) ஒன்றில் சபைத் தீர்மானத்தின்மூலம் அல்லது வேறுவகையாகச் சட்ட ஆளை எவரேனுமாள் பிரதிநிதித்துவப்படுத்துவதற்காகக் கொடுக்கப்பட்ட அதிகாரவளிப்பு;

(ஈ) இயற்கை ஆளெவரும் முற்போந்த ஏற்பாடுகளின்கீழ் அடையாளங் காணப்படாதவிடத்து, சிரேட்ட முகாமைத்துவப் பதவிகளை வகிக்கும் இயைபான இயற்கை ஆட்களின் ஆளடையாளம்;

(உ) ஒரு சட்ட ஆளின் கட்டுப்படுத்துகின்ற அக்கறை வேறொரு சட்ட ஆளுக்கு உரித்தாக்கப்படும்போது, நிதிசாராத் தொழிலானது, எந்தச் சட்ட ஆளுக்குக் கட்டுப்படுத்துகின்ற அக்கறை உரித்தாக்கப்பட்டுள்ளதோ அந்தச் சட்ட ஆளைக் கட்டுப்படுத்துகின்ற இயற்கை ஆளை அடையாளங்காணுதல் வேண்டும்.

19. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், பின்வரும் தகவல்களினூடாகச் சட்ட ஒழுங்கேற்பாடொன்றின் பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்காணுதலும் அவரின் ஆளடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு இயன்றதாகவுள்ள ஒவ்வொரு வழிமுறையையும் எடுத்தலும் வேண்டும்:-

(அ) நம்பிக்கைப்பொறுப்புகளுக்காக, நம்பிக்கைப்பொறுப்பின் ஆக்குநர், நம்பிக்கைப்பொறுப்பாளர்கள், பயன்பெறுநர் அல்லது பயன்பெறுநர்களின் வகுப்பு மற்றும் நம்பிக்கைப்பொறுப்பின்மீது இறுதியான பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற வேறெவரேனும் இயற்கை ஆள் என்போரின் ஆளடையாளங்கள் (படிமுறைக் கட்டுப்பாடுமூலம் அல்லது சொத்தாண்மைமூலம் கட்டுப்படுத்துகின்றவர்கள் உட்பட); அல்லது

(ஆ) வேறுவகையினவான சட்ட ஒழுங்கேற்பாடுகளுக்காக, சமமான அல்லது ஒத்த பதவிகளிலுள்ள ஆட்களின் ஆளடையாளங்கள்.

**இயற்கை ஆள் நேரடியாகச் சமுகமளிக்காதவிடத்தான கொடுக்கல்வாங்கல்கள்**

20. (1) நிதிசாராத் தொழிலொன்று நேருக்குநேராகவிராத தொழில் தொடர்புகளுடன் அல்லது கொடுக்கல்வாங்கல்களுடன் இணைந்துள்ள எவையேனும் குறிப்பிட்ட இடர்களை எதிர்கொள்வதற்கான நடவடிக்கைமுறைகளைக் கொண்டிருந்தால் மட்டுமே, அத்தகைய நிதிசாராத் தொழிலானது வாடிக்கையாளரொருவருடன் நேருக்குநேராகவிராத தொழில் தொடர்பை உருவாக்கலாம். நிதிசாராத் தொழிலானது அத்தகைய வாடிக்கையாளர்களை உயர் இடர் வாடிக்கையாளர்களாக அடையாளங்காணுதலும் 16 ஆம் விதியைப் பின்பற்றுதலும் வேண்டும்.

(2) ஓராம் பந்தியிற் குறிப்பீடுசெய்யப்பட்ட நடவடிக்கைமுறைகள் பின்வருவனவற்றை உள்ளடக்குதல் வேண்டும்:-

(அ) தகவல் மற்றும் தொடர்பாடல் தொழினுட்பவியலினூடாகத் தொழில் தொடர்புகளை அல்லது கொடுக்கல்வாங்கல்களை நிலைப்படுத்துவதிலும் நடாத்துவதிலும் வெளிப்படுத்தப்பட்ட இடர்களைத் தவிர்ப்பதற்கென முற்காப்பு வழிமுறைகள் ;

(ஆ) நேருக்குநேரான தொழில் தொடர்புகளின் வாடிக்கையாளர்களுக்காகப் போன்று சமமானமுறையில் பயனுள்ளனவாகவுள்ள நேருக்குநேராகவிராத தொழில் தொடர்புகள் அல்லது கொடுக்கல்வாங்கல்கள் தொடர்பாக வாடிக்கையாளரின் ஆளடையாளத்தை அடையாளங்காண்பதற்கும் சரிபார்ப்பதற்கும் தோதான வழிமுறைகள்;

(இ) நேருக்குநேராகவிராத தொழில் தொடர்புகளை அல்லது கொடுக்கல்வாங்கல்களை நிலைப்படுத்துவதிலும் நடாத்துவதிலும் வெளிப்படுத்தப்படக்கூடிய நிகழவுள்ள பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளித்தல் இடர்களைக் கண்காணிப்பதற்கும் அறிக்கையிடுவதற்குமான பொறிமுறைகள்.

**களரிகளும், சங்கங்களும், கழகங்களும்**

21. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், களரிகள், சங்கங்கள் அல்லது கழகங்களாகவுள்ள வாடிக்கையாளர்களிடமிருந்து பதவிதாங்குநர்களின் அல்லது இயைபான களரியை, சங்கத்தை அல்லது கழகத்தைப் பிரதிநிதித்துவப்படுத்துவதற்கு அதிகாரமளிக்கப்பட்ட வேறெவரேனும் ஆட்களின் பதிவுச்சான்றிதழும் அடையாளங்காணல் ஆவணங்களுமுட்பட, இயைபான அடையாளங்காணல் மற்றும் அமைப்பாவணங்களை அல்லது வேறு ஒத்த ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்.

**அரசசார்பற்ற ஒழுங்கமைப்புகள், இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்புகள் அல்லது தரும நிறுவனங்கள்**

22. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், (இதனகத்துப்பின்னர் "அசாஒ" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) அரசசார்பற்ற ஒழுங்கமைப்பொன்றுடன் அல்லது (இதனகத்துப்பின்னர் "இஈஒ" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) இலாபம் ஈட்டாத ஒழுங்கமைப்பொன்றுடன் மற்றும் தரும நிறுவனங்களுடன் தொடர்பொன்றைச் செய்துகொள்ளும்போது அதிகரித்த வாஉவி வழிமுறைகளை நடாத்துதல் வேண்டும்.

23. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், அசாஒ, இஈஒ அல்லது தரும நிறுவனம், அவற்றின் அதிகாரமளிக்கப்பட்ட கையொப்பமிடுநர்கள், அவற்றின் ஆளும் குழுக்களின் உறுப்பினர்கள் மற்றும் பயன்பெறும் சொந்தக்காரர்கள், ஒன்றில் அதேபெயரின்கீழ் அல்லது வித்தியாசமானவொரு பெயரின்கீழ், 41 ஆம் விதியில் குறித்துரைக்கப்பட்டவாறான ஒரு நிரலில் பெயர்குறிக்கப்பட்ட ஏதேனும் உருவகத்துடன் அல்லது ஆளுடன் இணைந்தவையாக இராதிருப்பதனை உறுதிப்படுத்துவதற்கு அவ்வொழுங்கமைப்புகளுடன் எல்லா உளதாம் தொடர்புகளையும் பரிசீலனைசெய்தலும் கண்காணித்தலும் வேண்டும்.

**அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆட்கள் (அவெஆ)**

24. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆட்கள் அல்லது அவர்களின் நேரடிக் குடும்ப உறுப்பினர்கள் மற்றும் நெருங்கிய இணையாளிகள் தொடர்பாக,-

(அ) வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆளாக உள்ளாராவென்பதைத் தீர்மானிப்பதற்குத் தோதான உள்ளகக் கொள்கைகள்,நடவடிக்கைமுறைகள் மற்றும் கட்டுப்பாடுகளை நடைமுறைப்படுத்துதல் வேண்டும்;

(ஆ) வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆளாகவிருக்குமிடத்து, தொழில் தொடர்பைச் செய்துகொள்வதற்கு அல்லது தொடர்வதற்கு நிதிசாராத் தொழில் ஏதேனுமிருப்பின் அதன் சிரேட்ட முகாமைத்துவத்திடமிருந்து அங்கீகாரம் பெற்றுக்கொள்ளுதல் வேண்டும்;

(இ) வாடிக்கையாளர் அல்லது பயன்பெறும் சொந்தக்காரர் அரசியல்ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆளாகவிருக்குமிடத்து, நிதிமூலத்தையும் செல்வமூலத்தையும் தோதான வழிவகைகள்மூலம் அடையாளங்காணுதல் வேண்டும்; அத்துடன்

(ஈ) நிதிசாராத் தொழிலுடன் அவர்களின் தொழில் தொடர்புகளின் அதிகரித்த வாஉவி மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கண்காணிப்பை நடாத்துதல் வேண்டும்.

**உளதாம் வாடிக்கையாளர்**

25. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், பின்வருவனவற்றைக் கவனத்திற் கொள்வதன் மூலம் மதிப்பிடப்படும் முக்கியமான தன்மை மற்றும் இடர் அடிப்படையில் ஏலவேயுள்ள வாடிக்கையாளர்களின்மீது வாஉவி நடாத்துதல் வேண்டும்:-

(அ) கொடுக்கல்வாங்கலின் முக்கியத்துவம் உள்ளடங்கலாக, கொடுக்கல்வாங்கலைச் சூழவுள்ள தன்மையும் சூழ்நிலைகளும் ;

(ஆ) கொடுக்கல்வாங்கல் அல்லது தொழில்தொடர்பு தொழிற்படுத்தப்படுகின்ற முறையில் ஏதேனும் முக்கிய மாற்றம்; அல்லது

(இ) வாடிக்கையாளர் பற்றிய தற்போதுள்ள தகவலின் பற்றாக்குறை அல்லது வாடிக்கையாளரின் தகவலின் ஏதேனும் மாற்றம்.

26. ஒவ்வொரு நிதிசாரா தொழிலும் வாஉவி வழிமுறைகள் முன்னரே எடுக்கப்பட்டு போதுமான தகவல் பெறப்பட்டுள்ளதா என்றும், அவை எப்போதென்றும் கவனத்திற்கொண்டு, தோதான நேரங்களில், உளதாம் வாடிக்கையாளர் பற்றிய வாஉவியை நடாத்துதல் வேண்டும்.

27. உளதாம் வாடிக்கையாளரொருவர், வாஉவி தொடர்பில் திருப்தியற்ற தகவலை வழங்குவாராகவிருப்பின், அத்தகைய வாடிக்கையாளருடனான தொடர்பு உயர் இடரொன்றை வெளிப்படுத்துகின்ற தொடர்பொன்றாகவும் அத்துடன் அதிகரித்த வாஉவி வழிமுறைகளுக்கமைவானதாகவும் கருதப்படுதல் வேண்டும்.

**உயர்இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்கள்**

28. (1) ஒவ்வொரு நிதிசாரா தொழிலும் உயர் இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்களுடனான தொழில் தொடர்புகளுக்கும் கொடுக்கல்வாங்கல்களுக்குமான அதிகரித்த வாஉவி வழிமுறைகளை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்.

(2) நிதிசார் உளவறிதற் கூறானது, வெளிநாட்டு அலுவல்கள் என்னும் விடயம் எந்த அமைச்சருக்கு குறித்தளிக்கப்பட்டுள்ளதோ அந்த அமைச்சரின் அமைச்சுச் செயலாளருடனான கலந்தாலோசனையுடன், அதன் உத்தியோகபூர்வ வலைத்தளத்தில் உயர் இடர் நாடுகள் பற்றிய நிரலை –

(அ) நிதிசார் நடவடிக்கைச் செயலணி நிரற்படுத்தலின் அடிப்படையில்; அல்லது

(ஆ) தனிப்பட்ட முறையில் பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதற் கொள்கைகளில் செயல்நுணுக்கக் குறைபாடுகள் உள்ளமையையும், அந்நாடுகளில் அந்தக் குறைபாடுகளுக்கு முகங்கொடுப்பதில் போதிய முன்னேற்றம் அடையாமையையும் கணக்கெடுத்து

வெளியிடுதல் வேண்டும்.

29. அதிகரித்த வாஉவி வழிமுறைகளுக்கு மேலதிகமாக, ஒவ்வொரு நிதிசாரா தொழிலும், நிரற்படுத்தப்பட்ட உயர் இடர் நாடுகளின் இடர்த்தன்மைக்கு நேரொத்ததாக, 28ஆம் விதியின் (2)ஆம் பந்தியின் ஏற்பாடுகளுக்கிணங்க உயர் இடர் நாடுகளின் நிரலில் குறித்துரைக்கப்பட்ட நாடுகளுக்காக, பின்வருவன உள்ளடங்கலாக, தோதான எதிர் வழிமுறைகள், மேலதிக வாஉவி வழிமுறைகள் என்பவற்றை ஏற்புடையனவாக்குதல் வேண்டும்:-

(அ) உயர் இடர் நாடொன்றிலுள்ள அடையாளங்காணப்பட்ட ஆட்கள் அல்லது சட்ட ஒழுங்கேற்பாடுகளுடன் தொழில் தொடர்புகளை அல்லது நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை வரையறுத்தல்; அத்துடன்

(ஆ) நிதிசார் உளவறிதற் கூறினால் குறித்துரைக்கப்படக் கூடியவாறான வேறேதேனும் வழிமுறையை நடாத்துதல்.

**புதிய தொழிநுட்பவியல்கள் (அளிபொருட்கள், சேவைகள் மற்றும் தொழிற் செயல்முறைகள்)**

30. ஒவ்வொரு நிதிசாரா தொழிலும், புதிய சேர்ப்பிப்பு அமைப்பு முறைகளும் புதிய மற்றும் முன்னிருந்த அளிபொருட்களுக்காகப் புதிய அல்லது முன்னேற்றமடைந்து வருகின்ற தொழிநுட்பவியல்களின் பயன்பாடும் உட்பட, புதிய அளிபொருட்கள், சேவைகள் மற்றும் புதிய தொழிற் செயல்முறைகளின் அபிவிருத்தி தொடர்பாக எழக்கூடிய பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை அடையாளங்கண்டு மதிப்பிடுதல் வேண்டும்.

31. ஒவ்வொரு நிதிசாரா தொழிலும் -

(அ) புதிய அளிபொருட்கள், சேவைகள் மற்றும் தொழிநுட்பவியல்களை ஆரம்பிக்குமுன்னர் அல்லது பயன்படுத்துமுன்னர் இடர் மதிப்பீடுகளை மேற்கொள்ளல் வேண்டும்.

(ஆ) புதிய அளிபொருட்களினதும் புதிய தொழிற்செயல்முறைகளினதும் முன்னேற்றம் தொடர்பாக எழக்கூடிய இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் தோதான வழிமுறைகளை எடுத்தல் வேண்டும்.

**நடைபெற்றுக்கொண்டிருக்கும் உரிய விழிப்புக்கவனம்**

32. ஒவ்வொரு நிதிசாரா தொழிலும், அதன் வாடிக்கையாளர்களுடனான தொழில் தொடர்பைத் தொடர்ந்து செல்வது பற்றி சட்டத்தின் 5ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கிணங்க, நடைபெற்றுக்கொண்டிருக்கும் உரிய விழிப்புக்கவனம் மற்றும் நடைபெற்றுக்கொண்டிருக்கும் நுனித்தாராய்வு என்பவற்றை பின்வருமாறு நடாத்துதல் வேண்டும் -

(அ) நடாத்தப்பட்டுவருகின்ற கொடுக்கல்வாங்கல்கள், அவசியமாகவுள்ளவிடத்து நிதிமூலம் உட்பட, வாடிக்கையாளர்கள், அவர்களின் தொழில் தொடர்பில் நிதிசாரா தொழில் பற்றிய அறிவுடன் ஒத்திருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்திக்கொள்வதற்கு அத்தொடர்பினூடாக மேற்கொள்ளப்படுகின்ற கொடுக்கல்வாங்கல்களை நுனித்தாராய்தல்.

(ஆ) குறிப்பாக உயர் இடர் நாடுகளிலிருந்தான வாடிக்கையாளர்களுக்கான உளதாம் பதிவேடுகளின் மீளாய்வை மேற்கொள்வதன் மூலம், வாஉவி செயல்முறையின் கீழ் சேகரிக்கப்பட்ட ஆவணங்கள், தரவுகள் அல்லது தகவல்கள் நாளதுவரைப்படுத்தியும் இயைபாகவும் வைக்கப்பட்டுள்ளதென்பதை உறுதிப்படுத்துதல்.

(இ) பின்வரும் ஏதேனும் கொடுக்கல்வாங்கலின் அல்லது தொழில்தொடர்பின் பொருளாதாரப் பின்னணியையும் நோக்கத்தையும் கவனத்திற்கொள்ளுதல்:-(i)வழமைக்குமாறானவையெனத் தோன்றுதல்;(ii)கொடுகல்வாங்கலின் அளவுடன் ஒப்பிடும்போது எதிர்பார்க்கப்பட்ட செயற்பாட்டு வகையுடனும் தொழில் மாதிரியுடனும் ஒவ்வாதிருத்தல்;(iii)ஏதேனும் வெளிப்படையான பொருளாதார நோக்கத்தைக் கொண்டிராதிருத்தல்; அல்லது(iv)அத்தகைய கொடுக்கல்வாங்கலின், விசேடமாக சிக்கலானதும் பாரியளவிலானதுமான கொடுக்கல்வாங்கல் ஒன்றின் அல்லது உயர் இடர் வாடிக்கையாளர்கள் ஈடுபடுகின்ற கொடுக்கல்வாங்கல் ஒன்றின் சட்டத்தன்மை பற்றிய சந்தேகத்தை எழுப்புதல்.

33. நடைபெற்றுக்கொண்டிருக்கும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தின் அல்லது அதிகரித்த நடைபெற்றுக் கொண்டிருக்கும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தின் அடிக்கடியானதன்மையானது, இடர்வெளிப்பாடு மற்றும் கொடுக்கல்வாங்கல்களின் தன்மை என்பவற்றின் அடிப்படையில் வாடிக்கையாளரினால் வெளிப்படுத்தப்பட்ட பணம் தூய்தாக்கல் மட்டத்துடனும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களுடனும் ஒத்திருத்தல் வேண்டும்.

34. ஒவ்வொரு நிதிசாரா தொழிலும், அதிகரித்த நடைபெற்றுக்கொண்டிருக்கும் வாடிக்கையாளர் உரிய விழிப்புக்கவனத்தை நடாத்தும் போது, பயன்படுத்தப்பட்ட கட்டுப்பாடுகளினது எண்ணிக்கையையும் நேரத்தையும் அதிகரித்தல் வேண்டும் என்பதுடன்,மேலதிக பரிசோதனைகளைத் தேவைப்படுத்துகின்ற கொடுக்கல்வாங்கல்களின் முறைகளையும் தேர்ந்தெடுத்தல் வேண்டும்.

**மூன்றாந்திறத்தவர்களின்மீது நம்பியிருத்தல்**

35. வாடிக்கையாளரை அடையாளங்காணுதல், பயன்பெறும் சொந்தக்காரரை அடையாளங்காணுதல் மற்றும் தொழிலின் தன்மையை புரிந்துகொள்ளுதல், அல்லது தொழிலைத் தொடங்குதல் உட்பட வாஉவி வழிமுறைகளை நடாத்துவதற்கென மூன்றாந்திறத்தவர் நிதிநிறுவனம் ஒன்றின்மீது அல்லது நிதிசாராத் தொழில் ஒன்றின்மீது, அது நிதிசாராத் தொழில் மூலம் அவ்வாறு செய்வது செயல்முறைக்கு உகந்ததாக இல்லாதபோது நம்பியிருக்கலாம்.

36. ஏதேனும் நிதிசாராத் தொழிலானது வாஉவி வழிமுறைகளை நடாத்துவதற்கு மூன்றாந்திறத்தவரான நிதிநிறுவனம் ஒன்றின்மீது அல்லது நிதிசாராத் தொழில் ஒன்றின்மீது நம்பியிருக்குமிடத்து, வாஉவி வழிமுறைகளுக்கான இறுதிப்பொறுப்பு மூன்றாந்திறத்தவர்மீது நம்பியிருக்கின்ற நிதிசாராத் தொழிலுடன் இருத்தல் வேண்டும், அது –

(அ) வாஉவி தொடர்பாக அவசியமான தகவல்களை உடனடியாகப் பெறுதலும் வேண்டும்;

(ஆ) அடையாளங்காணல் தரவினதும் வாஉவி தேவைப்பாடுகள் தொடர்பான ஏனைய இயைபான ஆவணப்படுத்துகையினதும் பிரதிகள் தாமதமின்றி வேண்டுகோளின்மேல் மூன்றாந்திறத்தவரிடமிருந்து கிடைக்கக்கூடியதாக்கப்படுமெனத் தன்னைத் திருப்திப்படுத்திக்கொள்வதற்கான நடபடிகளை எடுத்தலும் வேண்டும்.

(இ) மூன்றாந்திறத்தவர் ஒழுங்குபடுத்தப்படுகின்றது, மேற்பார்வை செய்யப்படுகின்றது அல்லது கண்காணிக்கப்படுகின்றது எனவும் வாஉவி யைப் கடைப்பிடிப்பதற்கான வழிமுறைகளையும் அதன்கீழ்

ஆக்கப்பட்ட விதிகளின் சட்டத்திற்கும் இணங்கியொழுகுகின்ற பதிவேடு வைத்திருத்தல் தேவைப்பாடுகளையும் பெற்றுள்ளது எனவும் தன்னை திருப்திப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

37. மூன்றாந்திறத்தவர்மீது நம்பியுள்ள நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் -

(அ) பணம் தூய்தாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்புக்கெதிரான கொள்கைகளில் செயல்நுணுக்கு குறைபாடுகளைக் கொண்டுள்ளனவாக நிதிசார் நடவடிக்கைச் செயலணியினால் அடையாளங் காணப்பட்டுள்ள நாடுகளில் இருந்தானவை உட்பட சர்வதேச நிதிசார் முறைமைக்குப் பணம் தூய்த்தாக்கலுக்கு எதிரான மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை தணிப்பதனை இயலச் செய்கின்ற உண்மைக் கொள்கைகளையும் நடவடிக்கை முறைகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆயினும் எவ்வாறாயினும், இவ்விதிகளின் நோக்கங்களுக்காக மூன்றாம் திறத்தவர்மீது நம்பிக்கை கொண்டுள்ள ஏகபோக தொழிலர்கள் அல்லது ஏகபோக உரிமையாளர்களாக வரவுகளை சட்டவறிஞர்கள், நொத்தாரிசுகள், வேறு சுயாதின சட்ட உயர்தொழிலர்கள் மற்றும் கணக்காளர்கள் இப்பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதில்இயைபான துறையினால் வெளிப்படுத்தப்பட்ட இடர்மட்டத்தையும் இப்பந்தியின் ஏற்பாடுகளுடன் இணங்கியொழுகுவதை உறுதிப்படுத்துவதில் எழக்கூடியதான நடைமுறைச் சிரமங்களையும் கவனத்திற்கொண்டு இச்சட்டத்திற்கும் அதன்கீழ் ஆக்கப்பட்ட ஒழுங்குவிதிக்கும் அல்லது விதிக்கும் அமைய நிதிசார் உளவறிதல் அலகினால் காலத்திற்குக்காலம் வழங்கப்பட்ட வழிகாட்டு நெறிகளைப் பின்பற்றுதல் வேண்டும்.

(ஆ) எந்த மூன்றாந்திறத்தவர் நம்பப்படக் கூடுமோ அந்த மூன்றாந் திறத்தவரின் நாட்டைத் தீர்மானிக்கும் போது நாட்டின் இடர் மட்டம் பற்றி கிடைக்கக்கூடிய தகவலை கருத்திற் கொள்ளுதல் வேண்டும்.

## பாகம் III

## பதிவேடுவைத்திருத்தல்

38. (1) நிதிசாரத்தொழில் ஒவ்வொன்றும் இச்சட்டத்தின் 5ஆம் மற்றும் 6ஆம் பிரிவுகளுக்கு இணங்க குறிப்பாக வா.உ.வி செய்முறையின் போது பெறப்பட்டதும் கொடுக்கல்வாங்கல் தொடர்பானவையுமான எவையேனும் கணக்குகள், கோப்புகள், வியாபாரக் கடிதத் தொடர்புகள் மற்றும் ஆவணங்கள், வாடிக்கையாளர்களினதும் பயன்பெறும் சொந்தக்காரர்களினதும் ஆள்அடையாளத்தைச் சரிபார்ப்பதற்கு பயன்படும் ஆவணங்கள் மற்றும் பொறுப்பேற்கப்பட்ட ஏதேனும் பகுப்பாய்வின் பெறுபேறு உட்பட இயைபான பதிவேடுகளையும் பேணுதல் வேண்டும்.

(2) பதிவேடுகள் நாளது வரையானவையாகப் பேணப்படுதலும் வைத்திருக்கப்படுதலும் வேண்டும்.

39. நிதிசாரத் தொழில் ஒவ்வொன்றும் ஆறுவருடங்களுக்கு மேற்பட்ட காலப்பகுதி ஒன்றுக்கு பதிவேடுகளை வைத்திருத்தல் வேண்டும். ஏதேனும் பதிவேடு நடைபெற்றுக்கொண்டிருக்கும் நுண்ணாய்விற்கு அல்லது வழக்காடுகைக்கு அமையவுள்ளவிடத்து அல்லது சட்ட நீதிமன்றம் ஒன்றில் வேறு தோதான அதிகாரசபை முன்னர் காண்பிக்கப்படுவதற்கு தேவைப்படுமிடத்து அத்தகைய பதிவேடு இனிமேல் தேவையில்லை என இயைபான அதிகாரியினால் நிதிசாராத் தொழிலுக்கு அறிவிக்கப்படுகின்ற அத்தகைய காலம் வரை வைத்திருக்கப்படுதல் வேண்டும்.

40. நிதிசாராத் தொழில் ஒவ்வொன்றும் சட்டநீதிமன்றம் ஒன்றில் சான்றாக ஏல்தகவுடையதாகவுள்ளதான படிவம் ஒன்றில் இயைபான பதிவேடுகளை பேணுதல் வேண்டும் என்பதுடன் மேற்பார்வை அதிகாரிகள் மற்றும் வலுப்படுத்தும் அதிகாரிகளினால் குறித்துரைக்கப்பட்ட உரிய முறை ஒன்றில் அத்தகைய அதிகாரிகளுக்கு அத்தகைய பதிவேட்டை கிடைக்கக்கூடியதாக்குதல் வேண்டும்.

## பாகம் IV

## நானாவிதமானவை

41. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும் இணங்கியொழுகுகை அலுவலர் ஒருவரை நியமிக்கும்போது சிரேட்ட முகாமைத்துவ மட்ட அலுவலர் ஒருவரை நியமிக்கலாம்; அவர் சட்டம் மற்றும் இவ்விதிகளின் தேவைப்பாடுகளுடன் நிதிசாராத் தொழிலின் இணங்கியொழுகுகையை உறுதிப்படுத்துவதற்குப் பொறுப்பாகவிருத்தல் வேண்டும்.

42. ஒவ்வொரு நிதிசாராத் தொழிலும், பயங்கரவாதம் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் உற்பத்திப்பெருக்கம் மற்றும் அதன் நிதியளிப்பு தொடர்பான இலக்குவைக்கப்பட்ட நிதிசார் தடைகள் பற்றிய

ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட நிரல் தொடர்பில், 1968 ஆம் ஆண்டின் 45 ஆம் இலக்க ஐக்கிய நாடுகள் சபைச் சட்டத்திற்கு இணங்கியொழுக வழங்கப்பட்ட ஏதேனும் பெயர்குறிக்கப்பட்ட நிரலில் எவரேனும் வாடிக்கையாளர் அல்லது பயன்பெறுநர் காணப்படுகின்றாராவென்பதைச் சரிபார்த்தல் வேண்டும்.

43. இவ்விதிகளில் -

"பயன்பெறுநர்" என்பது, கொடுக்கல்வாங்கலொன்றின் நன்மைக்கு உரித்துடையவராகவுள்ள ஆளொருவர் எனப் பொருள்படும்;

"பயன்பெறும் சொந்தக்காரர்" என்பது, ஒரு வாடிக்கையாளரை இறுதியாகத் தமதாக வைத்திருக்கின்ற அல்லது கட்டுப்படுத்துகின்ற ஓர் இயற்கை ஆள் அல்லது எந்த ஆளின் சார்பில் கொடுக்கல்வாங்கலொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதோ அந்த ஆள் என்று பொருள்படும் என்பதுடன், ஆளொருவர்மீது அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டின்மீது இறுதிப் பயனுறும் கட்டுப்பாட்டைப் பிரயோகிக்கின்ற ஆளையும் உள்ளடக்கும்;

"நெருங்கிய இணையாளி" என்பது -

(அ) சட்ட உருவகங்கள் மற்றும் சட்ட ஒழுங்கேற்பாடுகளின் கூட்டுப்பயன்பெறும் சொத்தாண்மையைக் கொண்டுள்ளதாக அல்லது வேறேதேனும் நெருங்கிய தொழில் தொடர்பைக் கொண்டுள்ளதாக அறியப்படுகின்ற இயற்கை ஆளொருவர்; அத்துடன்

(ஆ) எந்தச் சட்ட உருவகத்தின் அல்லது சட்ட ஒழுங்கேற்பாட்டின் பயன்பெறும் சொந்தக்காரர் ஓர் இயற்கை ஆளாகவுள்ளாரோ மற்றும் அத்தகைய ஆளின் அல்லது அவரது நெருங்கிய குடும்பவுறுப்பினர்களின் நன்மைக்காக நிலைப்படுத்தப்பட்டுள்ளவராக அறியப்பட்டுள்ளாரோ அந்த சட்ட உருவகத்தையும் அல்லது ஒழுங்கேற்பாட்டையும்,

உள்ளடக்கும்;

"கட்டுப்படுத்துகின்ற சொத்தாண்மை அக்கறை" என்பது, சட்ட ஆளொருவரின் மூலதனத்தினது பத்து சதவீதத்துக்கு மேற்பட்டதை வழங்குவதன்மூலம் கொள்ளப்பட்ட அக்கறை எனப் பொருள்படும்;

"உளதாம் வாடிக்கையாளர்" என்பது, இவ்விதிகள் வலுவுக்கு வருவதன்மேல் அல்லது வருமுன்னர் ஒரு தொழில் தொடர்பைத் தொடங்கியுள்ள ஒரு வாடிக்கையாளர் எனப் பொருள்படும்;

"நிதிசார் நடவடிக்கைச் செயலணி" என்பது, பணம் தூய்தாக்கல், பயங்கரவாதி நிதியளிப்பு மற்றும் பேரழிவை ஏற்படுத்துகின்ற ஆயுதங்களின் உற்பத்திப்பெருக்கத்திற்கு நிதியளித்தலுக்கு எதிராக உலகளாவிய நிதிசார் முறைமையைப் பாதுகாப்பதற்கு கொள்கைகளை அபிவிருத்தி செய்து மேம்படுத்துகின்ற சுயாதீன அரசாங்கங்களுக்கிடையேயானவொரு குழு எனப் பொருள்படும்;

"நெருங்கிய குடும்பவுறுப்பினர்" என்பது, வாழ்க்கைத்துணை, பிள்ளைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகள் அல்லது துணைவர்கள், பெற்றோர்கள், உடன்பிறந்தோர் மற்றும் அவர்களின் வாழ்க்கைத் துணைகள் மற்றும் பேரப்பிள்ளைகள் மற்றும் அவர்களின் வாழ்க்கைத்துணைகளை உள்ளடக்கும்;

"சட்ட ஆள்" என்பது, நிதிசாராத் தொழிலொன்றுடன் நிரந்தர வாடிக்கையாளர் தொடர்பை நிலைப்படுத்துவதற்கு இயன்றதாகவுள்ள அல்லது வேறுவகையில் ஆதனத்தைச் சொந்தமாக வைத்திருக்கின்ற இயற்கை ஆள் ஒருவர் தவிர்ந்த ஏதேனும் உருவகம் எனப் பொருள்படும் என்பதுடன், ஒரு கம்பெனி, கூட்டிணைக்கப்பட்ட குழுவொன்று, மன்றம், பங்காண்மை அல்லது கழகம் என்பவற்றையும் உள்ளடக்கும்;

"சட்ட ஒழுங்கேற்பாடு" என்பது, வெளிப்படையான நம்பிக்கைப் பொறுப்பையும் நம்பகக் கணக்குகளையும் அல்லது நியமத்தரையும் உள்ளடக்கும்;

"பணம் தூய்தாக்கல்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க, பணம் தூய்தாக்கலைத் தடுத்தல் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் நியதிகளின்படி பணம் தூய்தாக்கல் தவறு எனப் பொருள்படும்;

"இடைக்கிடையான வாடிக்கையாளர்" என்பது, இடைக்கிடையாக கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் எவரேனும் வாடிக்கையாளர் எனப் பொருள்படும்;

"இருந்திட்டொன்றான வாடிக்கையாளர்" என்பது, ஒரு சந்தர்ப்பத்தில் ஏதேனும் ஒரு தடவைக் கொடுக்கல்வாங்கலில் அல்லது பல்வேறு கொடுக்கல்வாங்கல்களில் ஈடுபடும் எவரேனும் வாடிக்கையாளர் எனப் பொருள்படும்;

"ஆள்" என்பது, ஓர் இயற்கை அல்லது சட்ட ஆள் என்று பொருள்படும் என்பதுடன், கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்படாத ஆட்கள் குழுவையும் இலங்கைக்கு வெளியே கூட்டிணைக்கப்பட்ட அல்லது தாபிக்கப்பட்ட கிளையையும் உள்ளடக்கும்;

"அரசியல் ரீதியில் முகங்கொடுக்கவேண்டிய ஆள்" என்பது, ஒன்றில் உள்நாட்டுரீதியில் அல்லது ஒரு வெளிநாட்டினால், அல்லது ஒரு சர்வதேச ஒழுங்கமைப்பில் பிரபல்யமான பொதுப்பணிகள் பொறுப்பிக்கப்பட்ட ஆள் ஒருவர் எனப் பொருள்படும் என்பதுடன், ஓர் அரசின் அல்லது அரசாங்கத்தின் தலைவரையும், ஓர் அரசியல்வாதியையும், ஒரு சிரேட்ட அரசாங்க அலுவலரையும், நீதிமுறை அலுவலர் அல்லது இராணுவ அலுவலரையும், அரசுக்குச் சொந்தமான கூட்டுத்தாபனம், அரசாங்க அல்லது தன்னாட்சிக் குழு என்பவற்றின் சிரேட்ட நிறைவேற்று அலுவலரையும் உள்ளடக்கும் ஆனால் நடுத்தரப் பதவி வரிசையிலுள்ள அல்லது கனிஷ்ட பதவி வரிசையிலுள்ள தனியாட்களை உள்ளடக்காது;

"இடர் அடிப்படையிலான அணுகுமுறை" என்பது, பணம் தூய்தாக்கல் மற்றும் பயங்கரவாதி நிதியளிப்பு இடர்களை முகாமை செய்வதற்கும் தணிப்பதற்கும் வாஉவி வழிமுறைகளை ஏற்புடையனவாக்கல் தொடர்பாக, குறைந்த இடர் மட்டங்களுடனான வாடிக்கையாளர்களின் விடயத்தில், எளிமையாக்கப்பட்ட வாஉவி வழிமுறைகளைப் பயன்படுத்துதலும் உயர் இடர் மட்டங்களுடனான வாடிக்கையாளர்களின் விடயத்தில் அதிகரித்த வாஉவி வழிமுறைகளைப் பயன்படுத்துதலும் எனப் பொருள்படும்;

"சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அறிக்கை" என்பது, 2006 ஆம் ஆண்டின் 6 ஆம் இலக்க, நிதிசார் கொடுக்கல்வாங்கல்களை அறிக்கையிடல் சட்டத்தின் 7 ஆம் பிரிவிற்கிணங்கியொழுக, சந்தேகத்திற்கிடமான கொடுக்கல்வாங்கல் அல்லது எத்தனிக்கப்பட்ட கொடுக்கல்வாங்கல் பற்றிய அறிக்கை எனப் பொருள்படும்;

"பயங்கரவாதி நிதியளிப்பு" என்பது, 2005 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்க, பயங்கரவாதி நிதியளிப்பை ஒடுக்குதல் மீதான சமவாயச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின்கீழான தவறொன்றாகவமைகின்றவொரு செயல் எனப் பொருள்படும்.

01 - 766